Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சிலப்பதிகாரத்தில் இசைக்கருவிகள் பற்றியசெய்திகள்

12

திருமதி.ஜனனி.நடேசமூர்த்தி
சிரேஷ்டவிரிவுரையாளர், வாத்திய இசைத்துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம். இலங்கை.
jananades@yahoo.com

**ஆய்வுச்சுருக்கம்:**

ஐம்பெரும்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள் இயற்றினார்கள். இக்காப்பியத்தில் பண்டையகாலத்துத் தமிழ் மக்களின் வாழ்க்கைமுறை, பண்பாடு, கலை போன்ற பல்வேறு விடயங்களும் கூறப்பட்டுள்ளன. குறிப்பாக இசை, நடனம் பற்றிய செய்திகள் மிகஅதிகளவில் கூறப்பட்டுள்ளன. சிலப்பதிகாரம் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் தன்னுள் அடக்கியுள்ளது.

சிலப்பதிகாரத்திற்கு அரும்பதஉரையாராலும் அடியார்க்குநல்லாராலும் உரைகள் எழுதப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்திலிருந்தும் அதன் இரு உரைகளிலிருந்தும் இசைபற்றிய பலசெய்திகளையும் விரிவாகக் காணலாம். நடனஆசிரியர், இசையாசிரியர், யாழ் வாசிப்பவர், தண்ணுமைக்கலைஞர் பற்றிய இலக்கணம், அடிப்படைப் பாலைகள், பண்கள் என்பவற்றைப் பெறும்முறை, யாழ், அதன் வகைகள், பாகங்கள், அமைப்பு, வாசிக்கும்முறை, தண்ணுமைக்கருவிகள், இசைஉருவகைகள், இசை, நடனம் தொடர்பான கலைச்சொற்கள் போன்ற பலசெய்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இவ்வாறு பலசெய்திகள் சிலப்பதிகாரத்தில் காணப்பட்டாலும் இவ்வாய்வில் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள இசைக்கருவிகள் பற்றியே விரிவாக ஆராயப்படுகிறது.

**திறவுச்சொற்கள்:**

காப்பியம், குயிலுவர், பாலைகள், அலகுகூட்டுதல்.

**முன்னுரை:**

சிலம்பு என்பது காலில் அணியும் ஓர் அணிகலனையும் அதிகாரம் என்பது காப்பியத்தின் பகுதிகளையும் குறித்து சிலப்பதிகாரம் என இக்காப்பியம் அழைக்கப்படுகிறது. தமிழ் மொழியில் எழுதப்பட்ட நூல்களில் சிறந்த நூலாக சிலப்பதிகாரம் விளங்குகிறது. "தமிழ்நாட்டின்

பொற்காலங்களில்; சிலப்பதிகாரகாலமும் ஒன்று எனலாம். சங்ககாலத்தில் ஓங்கியிருந்த தமிழ் இயல், இசை, நாடகங்கள் சிலப்பதிகாரத்தில் ஒப்புவமையில்லாத அளவிற்கு உயர்ந்துநிற்கிறது." (செயலட்சுமி.எஸ், 2000, பக்:44)

சிலப்பதிகாரமானது புகார்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்னும் மூன்றுபெரும் பிரிவுகளில் 30 அதிகாரங்களை உள்ளடக்கியுள்ளது. ஏறக்குறைய 15 காதைகளில் இசை, இசைக்கருவிகள் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

சிலப்பதிகாரத்தில் 108 இசைக்கருவிகள் பற்றிக் குறிப்புக்கள் காணப்படுகின்றது. சில இசைக்கருவிகள் தனியாகவும், சில வாய்ப்பாட்டிற்குப் பக்கவாத்தியமாகவும் வாசிக்கப்பட்டன. மேலும் சில நாட்டியத்திற்கும் நாடகத்திற்கும் பக்கவாத்தியங்களாக வாசிக்கப்பட்டன.

இவ்வாய்வில் சிலப்பதிகாரத்தில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள யாழ், குழல், தண்ணுமை பற்றியே ஆராயப்படுகிறது.

பண்டையகாலத்தில் இசைக்கருவிகள் நரம்புக்கருவிகள், காற்றுக்கருவிகள், தோற்கருவிகள் என்னும் மூன்றுபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. மரத்தினால் செய்யப்பட்டுத் தந்திகள் அல்லது நரம்புகள் பூட்டப்பட்டவை நரம்புக்கருவிகள் எனவும், மரத்தினாலும் உலோகத்தினாலும் செய்யப்பட்டுக் குழாய் போன்ற கருவிகளின் உள்ளேயுள்ள காற்றுத்தம்பத்தின் அதிர்வால் ஒலிஉண்டாக்கப்படுபவை காற்றுக்கருவிகள் எனவும், மரத்தினால் செய்யப்பட்டு மேற்புறம் அதிர்வினால் ஒலி உண்டாக்கப்படுபவை தோற்கருவிகள் எனவும் அழைக்கப்பட்டன. இவ்வாறான இசைக்கருவிகள் உலோகம், தோல், மரம், மூங்கில் போன்ற பல்வேறு பொருட்களால் ஆக்கப்பட்டன.

நரம்புக்கருவிகள், காற்றுக்கருவிகள், தோற்கருவிகள் இவற்றை இசைப்போரை 'குயிலுவர்' என்று அழைப்பர். போர், விழாக்கள் என்பவற்றில் கருவிகளை இசைப்போரை 'பன்முறைக்கருவியர்' என்றும் அழைப்பர்.

"பயில் தொழில் குயிலுவர் பன்முறைக் கருவியர்
நகை வேழம் பரொடு வகைதெரி இருக்கயும்" (சிலப்:52 -53)

**நரம்புவாத்தியம்:**

சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நரம்புவாத்தியம் யாழ் ஆகும். பேரியாழ் (24 நரம்புகள் கொண்டது), மகரயாழ் (19நரம்புகள் கொண்டது), சகோடயாழ் (14நரம்புகள் கொண்டது), செங்கோட்டுயாழ் (07நரம்புகள் கொண்டது) என யாழின் வகைகள் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 14நரம்புகள்கொண்ட சகோடயாழில் செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை என்னும் ஏழு பாலைகள் பிறக்கும்முறை சிலப்பதிகார அரங்கேற்றுகாதையில் விபரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மெலிவு, சமன், வலிவு ஆகிய மூன்று தானங்களில் இசையானது

யாழில் இசைக்கப்பட்ட செய்தியும் கூறப்பட்டுள்ளது. "மிடறும் யாழும் இணைய இசைகூட்டும் முறையை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் மாதவி என்ற பாத்திரத்தின் துணைகொண்டு காட்டுகிறார். மாதவி கையில் யாழை வாங்கி அதை மீட்டிப் பாடும்முறை விளக்கப்படுகிறது.

அதிரா மரபின் யாழ் கைவாங்கி
மதுர கீதம் பாடினாள் மயங்கி
…….. ………………………………
(பெருமாள்.ஏ.ஏன், 1984, பக்: 205, 206)

யாழைமீட்டுவோன் இசையறிவுமிக்கவனாக இருத்தல் வேண்டும். அத்துடன் குற்றமற்றகருவியில்தான் இசையெழுப்பப்படல் வேண்டும். யாழானது சிறந்தமுறையில் உறையுள் இட்டு நன்கு பாதுகாக்கப்பட்டது. யாழ் மீட்டுவதற்குரிய விதிகளையும் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கானல்வரி என்பது கடலையும் அதன் கரையையும் பற்றியது. "சிலப்பதிகாரத்தில் கானல்வரி ஒரு முக்கியமான பகுதி. யாழ் நரம்புகளைப் பரிசோதித்து சுருதிகூட்டிப் பின்னர் யாழை எங்ஙனம் மீட்டி இசைப்பது என்பதற்கான இலக்கணங்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

'சித்திரப் படத்துட்புக்குச் செழுங்கோட்டின் மலர் புனைந்து
……………………………………………………………(கானல்வரி. 1-4)
(செயலட்சுமி.எஸ், 2000,பக்: 151)

மேலும் சிலப்பதிகாரத்தில் யாழின் உறுப்புக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பத்தல், கோடு, ஆணி, நரம்பு, திவவு, தந்திரிகம், ஒற்றுறுப்பு, கோல், மாடகம் போன்றவை யாழின் உறுப்புக்களாகும். "சிலப்பதிகாரத்தில் செங்கோட்டியாழின் உறுப்புக்கள் கூறப்பட்டுள்ளன. இவ்வுறுப்புக்கள் பற்றிக்கூறுமிடத்து இவையே மற்றயாழிற்கும் எனக் குறிப்பிடுகிறார்." (ஸ்ரீவித்யா. அ, 2009, பக்: 69)

சிலப்பதிகார வேனிற்காதையில் யாழ் எப்படிப் பிடித்துவாசிக்கப்பட்டது என்பது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. வலக்கைப் பெருவிரல் கோட்டிற்கு அடியிலும், மற்றையவிரல்கள் நரம்பைமீட்டும் விதத்தில் பதாகையிலும் இருக்கும். இடக்கைவிரல்கள் கோடைச்சுற்றிவளைந்து நரம்புகளின் மேல் வந்து இருக்கும்.

மேலும் அலகுசேர்க்கப்பட்ட யாழில் மாதவி வாசிக்கும் கையின் செய்கையானது வார்த்தல், வடித்தல், உந்தல் ,உறழ்தல், உருட்டல், தெருட்டல், அள்ளல், பட்டடை என எட்டுவகையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

'நாரதன் வீணை நயந்தெரிபாடலும் (சிலப்;: 6:18- 23) என்றபாடலில் வீணை என்னும் சொல் பயன்படுத்தப்பட்டிருந்தாலும் அடியார்க்குநல்லார் குறிப்பிட்டது யாழையே என்கிறார் ஏ.என். பெருமாள். (பெருமாள்.ஏ.என், 1984, பக்: 216)

**காற்றுக்கருவிகள்:**

காற்றுக்கருவிகளில் குழலானது பண்டைத்தமிழரால் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டுவந்துள்ளது. சிலப்பதிகாரத்தில் குழலாசிரியன்அமைதி பற்றிக் கூறுகையில் குழலாசிரியன் இசையின் எல்லா இலக்கணங்களையும் அறிந்தவனாகவும் சித்திரை, வஞ்சனை ஆகிய இரு புணர்ச்சிகள் பற்றி அறிந்தவனாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் நான்கு வர்த்தனைகளையும் பாலை இசை இலக்கணத்தையும் அறிந்து, முழவிசையை அனுசரித்து வாசிக்கத் தெரிந்தவனாகவும் இருத்தல் வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. பாடுவோனின் பாடலைக்கேட்டு அதனை விரிவாக்கும் திறமையும் அதேசமயம் தன் எல்லைமீறாமல் வாசிக்கத் தெரிந்தவனாகவும் இருத்தல் வேண்டும் என்றும் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.

“சொல்லிய இயல்பினிற் சித்திர வஞ்சனை
புல்லிய அறிந்து புணர்ப்போன் பண்பின்
……………………………………
(சிலப்: அரங்கேற்றுகாதை. பாடல் 60)

மேலும் காற்றுக்கருவிகளாக ஆம்பல், குழல், சின்னம், வயிர் ஆகிய கருவிகளும் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.

**தோற்கருவிகள்:**

சிலப்பதிகாரத்தில் பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, மொந்தை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, முரசு, சந்திரவளையம், கண்விடுதூம்G> சிறுபறை, பெரும்பறை, துடி எனப் பலவகையான தோற்கருவிகள் பயன்பாட்டில் இருந்ததாக சிலப்பதிகாரஅடியார்க்குநல்லார் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தண்ணுமைஆசிரியரானவர் இசை, நடனம் என்பவற்றின் எல்லாஉருக்கள் பற்றியும் இசைநரம்புகள் பற்றியும் தாளம் பற்றியும் அறிந்திருத்தல் வேண்டும். அத்துடன் தமிழ்மொழி அறிவுடையவராயும் இருத்தல் வேண்டும். பாட்டிற்கேற்ப யாழும் குழலும் வாய்ப்பாட்டும் இசைந்து கேட்குமாறும், நிகழ்கின்ற கூத்தின் குறிப்பினை அறிந்து இதமாக வாசிக்கவேண்டும். அத்துடன் மற்றையகருவிகளின் நாதக்குறைவினை நிறைவுசெய்தும், பிறவும் இனிதுகேட்குமாறும் தன் ஒலிமிகாமலும் கைத்தொழிற்கரணம் சிதைவின்றிச் செலுத்தும் திறமையானவனாகவும் இருத்தல் வேண்டும்.

“ஆடல், பாடல், இசையே, தமிழே
பண்ணே, பாணி , தூக்கே, முடமே
……………….............. (சிலப்: அரங்கேற்றுகாதை – பாடல் 45-55)

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**ஆமந்திரிகை:**

இசைக்கருவிகள் பலவும் சேர்ந்து இசைப்பது ஆமந்திரிகை அல்லது பல்லியம் என அழைக்கப்படும். சிலப்பதிகார அரங்கேற்றுகாதையில் எல்லாக் கருவிகளும் சேர்ந்து இசைத்தன என்ற செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளது. “குரல் அதன் வழி யாழ். யாழ் அதன் வழியில் தண்ணுமை. அதாவது சிறிய தோல்கருவிகள். தண்ணுமை வழியாக முழவு. அதாவது பெரிய தோற்கருவிகள். அவையனைத்தும் சேர்ந்து மிடற்றுதல் குரற்குழல் என்றார் இளங்கோவடிகள்.” (புரட்சிதாச ன், 1993, பக்: 11)

இவ்வாறாக சிலப்பதிகாரத்திலே அக்காலத்தில் வழக்கிலிருந்த இசைக்கருவிகள் பற்றியும் அவற்றின் பயன்பாடுகள் பற்றியும் அறிவதனூடாகப் பண்டைய தமிழர்கள் இசைக்கலையில் எவ்வாறு சிறப்புற்றிருந்தனர் என்பது பற்றியெல்லாம் அறியக்கூடியதாயுள்ளது.

**துணைநூற்பட்டியல் :**

1. செயலட்சுமி. எஸ், 2000, சிலப்பதிகாரத்தில் இசைச்செல்வங்கள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

2. புரட்சிதாசன், 1993, சிலப்பதிகார செங்கோட்டியாழ், பாண்டியன் பாசறை, சென்னை.

3. புலியூர்கேசிகன், 2017, சிலப்பதிகாரம் தெளிவுரை, கொற்றவை வெளியீடு, சென்னை.

4. பெருமாள்.ஏ.என், 1984, தமிழரிசை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

5. ஸ்ரீவித்யா.அ, 2009, யாழின் பரிணாம வளர்ச்சி, வனிதா பதிப்பகம், சென்னை.